கோலாலம்பூர் ஊராட்சி திட்டம்: பொதுமக்களின் கருத்து அவசியம்

மாநகர் மன்றம் அறிவிப்பு



பெட்டாலிங் ஜெயா, ஆக. 17-

கோலாலம்பூருக்கான புதிய திட்ட விதிகள் குறித்து பொதுமக்களின் கருத்து தேவைப்படுவதாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் தெரிவித்தது. 2040 ஆம்ஆண்டு கோலாலம்பூர் ஊராட்சி திட்டமானது ஜூன் மாதம் 11 ஆம் தேதியன்று கெசட்டில் பதிவாக்கியுள்ளது.

எனவே இனி எந்தவோர் ஆட்சேபனையும் எடுபடாமல் போய்விடும். 2025 ஆம் ஆண்டு கோலாலம்பூர் கூட்டரசு பிரதேச சட்ட விதிகளின் மூன்றாவது பிரிவின் கீழ் மக்களின் கருத்தினை கண்டறியும் கடமை கடப்பாட்டினை மாநகர் மன்றம் கொண்டுள்ளது.

குறிப்பிட்ட உத்தேச மேம்பாட்டு திட்டங்கள் குறித்தும் இதர வகை இடைக் கால திட்டங்கள் குறித்தும் மக்களின் கருத்தினை அறிவது கட்டாயம் என்று சட்டத்தின் மூன்றாவது விதிமுறை விவரிக்கிறது.

கோலாலம்பூரில் அங்கீகாரம் வழங்கப்பட்ட ஒவ்வொரு மேம்பாட்டு திட்டம் குறித்து கட்டுமான பணி தொடங்குவதற்கு முன்பும் கட்டுமான நடவடிக்கை நடைபெற்று கொண்டிருக்கும் போதும் அல்லது பிறகும் சம்பந்தப்பட்ட மக்களுடன் தகவல் பரிமாற்றம் செய்துகொள்ள வேண்டும்.

திட்டமிடப்பட்ட மேம்பாட்டு திட்டங்கள் குறித்து அருகில் உள்ள குடியிருப்பு வாசிகளுக்கு மேம்பாட்டாளர்கள் தக்க விளக்கம் தருவதை இது உறுதிப்படுத்தும்.

நகர்புற மேம்பாட்டு திட்டம் சம்பந்தமான முடிவு எடுக்கும் விஷயத்தில் கோலாலம்பூர் மாநகர் மன்றம் வெளிப்படையாக நடந்து கொள்கிறது என்று மேற்கண்ட அணுகுமுறை எடுத்துகாட்டுகிறது.

2025 ஆம் ஆண்டு கோலாலம்பூர் கூட்டரசு பிரதேச மேம்பாட்டு திட்டமானது ரகசியமாக கெஜட்டில் பதிவாகியுள்ளது என்று சி பூத்தே தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரெசா கோக் இதற்கு முன்பு இடித்துரைத்திருந்தார். இதற்கு விளக்கம் தரும் வண்ணம் கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் மேற்கண்ட அறிக்கை அமைந்திருந்தது.

மக்களின் கருத்திற்கு மதிப்பளிக்கும் வண்ணம் அனைத்து அம்சங்களை உள்ளடக்கும் வண்ணம் மாநகரின் மகத்தான மேம்பாட்டு திட்டாமனது சீராக சிறப்பாக மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

மாநகர் மன்றம் இதற்கு முன்பு 51 கலந்துரையாடல் கூட்டங் களை நடத்தியுள்ளது. கூட்டரசுப் பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர் களுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.